# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி. A. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2025 ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.61/2018–ல் இ.ம.எண். 1/2023**

S. பெரியசாமி

.... மனுதாரர் /வாதி

/ எ தி ர் /

1. K. செல்லமுத்து கவுண்டர் (இறப்பு)
2. நல்லம்மாள்
3. M. ராமசாமி
4. P. நரேஷ்குமார்
5. P. கார்த்திகேயன்

.... எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 23.01.2025 ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு K. சவடமுத்து, அவர்களும், 2 ம் எதிர்மனுதார்/2 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V. ஆறுமுகம், அவர்களும் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S. விஜயராஜன், அவர்களும், 4 மற்றும் 5 ம் எதிர்மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு C. குமரேசன், அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாலும், 3 ம் எதிர்மனுதாரர் வழக்கு விசாரணையின்போது அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத்

தரப்பினராகக் கருதப்பட்டும், மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால் அசல் வழக்கு எண் 61/2018–ல் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு பிராதினை திருத்திக் கொள்ள அனுமதியளிக்கக்கோரி உவிமுச கட்டளை 6 விதி 17 மற்றும் 18 மற்றும் பிரிவு 151ன் படியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதியால் மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் பின்வருமாறு** :–

தாவாச் சொத்தில் மனுதாரருக்குரிய 1/2 பாகச் சொத்துக்களைப் பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும்படியும், 1ம் எதிர்மனுதாரர் /1ம் பிரதிவாதி பேரிலும், தாவாச் சொத்துக்களைப் பொறுத்து எந்தவிதமான பந்தக பராதீனங்கள் செய்யக்கூடாதென்று 1,2,4,5 எதிர்மனுதாரர்கள்/1,2,4,5 பிரதிவாதிகள் பேரிலும் உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்குள் மோசடியாக ஏற்படுத்திக் கொண்டுள்ள மூன்று பதிவு ஆவணங்களும் சட்டப்படி செல்லாது (Null and void) என்று விளம்புகைப் பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. அசல் வழக்கு

நிலுவையிலிருந்தபோது மனுதாரரின் தகப்பனாரான 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை வாரிசாக விட்டுவிட்டு 4.8.2019ம் தேதி இறந்துவிட்டார். 1ம் எதிர்மனுதாரருக்கு மனுதாரரைத் தவிர வேறு வாரிசுகள் யாருமில்லை. தாவாச் சொத்துக்களை மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் கூட்டாக வைத்து அனுபவித்து வந்தனர். மனுதாரரின் தகப்பனார் 1ம் எதிர்மனுதாரரின் 1/2 பாகச் சொத்துக்களும் மனுதாரருக்கு வாரிசுதாரர் என்ற முறையில் பாத்தியப்பட்டுள்ளது. எனவே, தாவாச் சொத்துக்கள் முழுவதும் மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்டது. அசல் வழக்கு எண் 61/2018—ல் பரிகாரம் A,B—ல் கண்டுள்ள பரிகாரங்களை நீக்கம் செய்துவிட்டு தாவாச் சொத்துக்கள் மனுதாரருக்கு தனித்துப் பாத்தியப்பட்டதென்று விளம்புகை பரிகாரமும், அதன் தொடர் பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் எனக் கண்டு வழக்கினை திருத்தம் செய்யவேண்டியுள்ளது. அவ்வாறு திருத்துவதினால் வழக்கின் தன்மைகள் மாறுபடப்போவதில்லை. எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

3) 2ம் <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:—</u>

1ம் எதிர்மனுதாரர் 4.8.2019ம் தேதி காலமாகிவிட்டார் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. வழக்கிடைச் சொத்துக்கள் மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் கூட்டு அனுபவத்தில் இருந்ததாகவும், 1ம் எதிர்மனுதாரர் இறந்த பின்னர் அவரது பாதி பாகமும் மனுதாரருக்கு வாரிசுதாரர் என்ற முறையில் பாத்தியப்பட்டுள்ளதாகவும், சொத்துக்கள் முழுவதையும் மனுதாரரே

அனுபவித்து வருவதாகவும் கூறியிருப்பது பொய்யானது. உண்மையில் வழக்கினை 3 முதல் 12 அயிட்டச் சொத்துக்கள் 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் பெயரில் கிரையம் ஏற்பட்டு, பட்டா போன்றவைகள் ஏற்பட்டு அவர்களது முழுமையான சுவாதீனத்தில் இருந்து வருகிறது. இந்நிலையில் வழக்கிடைச் சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர் காலமான பின்னர் மனுதாரருக்கு முழுமையாக பாத்தியப்பட்டதென எனக் கோருவது ஏற்கத்தக்கதல்ல. வழக்குச் சொத்துக்கள் மனுதாரரின் அனுபவத்தில் இல்லை. மனுவில் கோரியுள்ளபடி பிராது திருத்தம் செய்யப்பட்டால் வழக்கின் தன்மை மாறுபடும். எனவே, மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) **<u>5ம் எதிர்மனுதாரரால் ஏற்கப்பட்டு 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–</u>**

1ம் எதிர்மனுதாரர் 4.8.2019ம் தேதி காலமாகிவிட்டார் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. வழக்கிடைச் சொத்துக்கள் மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் கூட்டு அனுபவத்தில் இருந்ததாகவும், 1ம் எதிர்மனுதாரர் இறந்த பின்னர் அவரது பாதி பாகமும் மனுதாரருக்கு வாரிசுதாரர் என்ற முறையில் பாத்தியப்பட்டுள்ளதாகவும், சொத்துக்கள் முழுவதையும் மனுதாரரே அனுபவித்து வருவதாகவும் கூறியிருப்பது பொய்யானது. உண்மையில் வழக்கினை 3 முதல் 12 அயிட்டச் சொத்துக்கள் 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் பெயரில் கிரையம் ஏற்பட்டு, பட்டா போன்றவைகள் ஏற்பட்டு அவர்களது

முழுமையான சுவாதீனத்தில் இருந்து வருகிறது. இந்நிலையில் வழக்கிடைச் சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர் காலமான பின்னர் மனுதாரருக்கு முழுமையாக பாத்தியப்பட்டதென எனக் கோருவது ஏற்கத்தக்கதல்ல. வழக்குச் சொத்துக்கள் மனுதாரரின் அனுபவத்தில் இல்லை. மனுவில் கோரியுள்ளபடி பிராது திருத்தம் செய்யப்பட்டால் வழக்கின் தன்மை மாறுபடும். எனவே, மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6) இரு தரப்பிலும் சாட்சியச், சான்றாவணங்கள் ஏதும் முன் வைக்கப்படவில்லை.

7) **பிரச்சனைக்குரிய தீர்வு**

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கு 1/2 பாகச் சொத்துக்களை தனித்துப்பிரித்து சுவாதீனம் பெற தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு நிலுவைக் காலத்தில் மனுதாரரின் தகப்பனாரான 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாகவும், எனவே, 1ம் எதிர்மனுதாரரின் ஒரே வாரிசான மனுதாரருக்கு வழக்குச் சொத்துக்கள் முழுமையாகப் பாத்தியப்பட்டதென்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரும் வகையில் பிராதுரை திருத்தம் செய்யப்படவேண்டியது அவசியமாக உள்ளதென்றும், பாகப்பிரிவினை பரிகாரத்தை நீக்கி விட்டு வழக்கு மதிப்பீடு, நீதிமன்றக் கட்டணம் செலுத்துகை, நீதிமன்றக் கட்டணம் சட்டப்பிரிவு மற்றும் தொடர்புடைய இதர

பிராது சங்கதிகளை மனுவில் துலக்கப்பட்டுள்ளபடி திருத்தம் செய்து வழக்கை 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேல் நடத்தவேண்டியது அவசியமாக உள்ளதென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

8) 2, 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவாச் சொத்துக்களில் மனுதாரர் அனுபவத்தில் இல்லையென்றும், 3 முதல் 12 அயிட்டச் சொத்துக்கள் 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் பெயரில் கிரையம் ஏற்பட்டு, பட்டா மாறுதல் செய்யப்பட்டு அனுபவித்து வரப்படுகிறது என்றும், மனுவில் சொல்லப்பட்டிருப்பதுபோல் பிராதுரை திருத்தம் செய்யப்பட்டால் வழக்கின் தன்மை மாறுபடும் என்றும், எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

9) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

10) மனுதாரர்/ வாதி தன் தகப்பனாரான 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்குச் சொத்துக்களில் 1/2 பாகம் சொத்துக்களைப் பிரித்து சுவாதீனம் ஒப்படைக்கக் கோரியும், பாகம்பிரிக்கப்படும் வரை வழக்குச் சொத்துக்களை வில்லங்கப்படுத்தக்கூடாதென்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரமும், வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து ஏற்பட்ட மூன்று கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகைப் பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவைக் காலத்தில் மனுதாரரை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு அவரது தகப்பனாரான 1ம் எதிர்மனுதார் இறந்துவிட்டதால் பாகப்பிரிவினை பரிகாரத்தை நீக்கி விட்டு

வழக்குச் சொத்துக்கள் முழுமையாக மனுதாரருக்குப் பாத்தியப்பட்டதென்று விளம்புகை மற்றும் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வகையில் பிராதுரை திருத்தம் மேற்கொண்டு அசல் வழக்கு எண் 61/2018 யை மேல்நடத்த அனுமதிக்கவேண்டுமென்று மனுதாரர் இந்த திருத்தல் மனுவை தாக்கல் செய்துள்ளார். வழக்குச் சொத்தின் பாத்தியஸ்தராகச் சொல்லப்படும் 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாகச் சொல்லப்படுவதும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கப்படுவில்லை. வழக்கின் தன்மை மாறுபடும் என்று மட்டுமே குறிப்பாக சொல்லப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை கோரும் வழக்கில் கர்த்தாவிற்குப் பின்னர் இந்த மனுதாரர் வாரிசு என்ற முறையில் சொத்து முழுவதும் தனக்குப் பாத்தியப்பட்டதென்று எடுத்துரைத்து பிராதுரை திருத்தம் செய்ய கோரியிருப்பது வழக்கின் தன்மை மாறுபடுவதாக கருத இயலாது. ஏனெனில், மனுதாரர் கோரும் திருத்தல் மனுவில் சொல்லப்பட்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கில் சேர்க்கப்பட்டு அதன் பேரில் அசல் வழக்கில் இரு தரப்பும் கேட்டு, உரிய சாட்சிய சான்றுகள் வாயிலாக இறுதியாக தீர்மானிக்கப்படவிருப்பதால், தற்போது பிராது திருத்தம் வழக்கின் தன்மை மாறுபடும் என வாதிட்டுள்ள எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் ஏற்கக்கூடியதாக இல்லை. இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் மனுதாரரின் திருத்தல் மனு வழக்கின் தற்போதைய நிலையில் அனுமதிக்கத்தக்கதாக இருப்பதாகவே காணமுடிகிறது. இந்நிலையில், மனுதாரர் பிராது திருத்தல் மனுவில் கோரியுள்ள

பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கத்தக்கது என்றும், அந்த வகையில் இம்மனு அனுமதிக்கப்படத்தக்கது என இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2025 ம் நாளன்று ஜனவரித் திங்கள் 23 ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.01.28 13:29:15 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

இரு தரப்பிலும் சாட்சியச், சான்றாவணம் : ஏதுமில்லை

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.01.28 13:29:20 +0530

**மு மா நீ,**
**திண்டுக்கல்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
திண்டுக்கல்
அ.வ.எண் 61/2018–ல்
இ.ம.எண் 1/2023
நாள் 23.01.2025
அசல்/நகல் உத்தரவு